**குண்டசாலை பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 25 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 28 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குண்டசாலை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | காணி மற்றும் கட்டிடங்கள் அபிவிருத்திக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 44,409,776 பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கிடுவதற்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | ஏற்றுக் கொள்கின்றேன் |
| (ii) | சபையிடமுள்ள ரூபா 4,801,000 பெறுமதியான காணியொன்று குறைத்தும் அறவிடப்படாத 13 காணிகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியான கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக் கொள்கின்றேன் |
| (iii) | காணி ஏலவிற்பனை செய்யப்பட்ட வருமானம் ரூபா 2,033,912 காணி கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | சரியான கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக் கொள்கின்றேன் |
| (iv) | மருந்து இருப்பு மற்றும் பொதுக் களஞ்சிய மீதி பௌதீக கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் பௌதீக காணப்படாத ரூபா 4,837,105 நீர் கைத்தொழில் பொருள் | சரியான கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக் கொள்கின்றேன் |

| | | | |
|---|---|---|---|
| | இருப்பொன்று கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | | |
| (v) | அலுத்வதத கொம்போஸ்ட் செயற்திட்டத்தின் சபைக்குரிய இலாபம் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மொத்த வருமானம் மற்றும் செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | சரியான கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக் கொள்கின்றேன் |
| (vi) | ரூபா 279,088 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. | சரியான கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக் கொள்கின்றேன் |

**(ஆ) இணங்காத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படும் ரூபா 40,421,743 ஆன 11 கணக்கு மீதிகளின் பெறுமதி அக் கணக்கு மீதிகளுடன் தொடர்பான உபயோகப் பேரேட்டு மீதிகளுக்க இடையே ஒப்பிடுகையில் ரூபா. 6,769,292 வித்தியாசம் காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாட்டை கண்டுபிடித்து கணக்கு சீராக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன் |

**(இ) பெறவேண்டிய செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் பெறவேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,292,601 தொகையானதுடன் அம் மீதி 01 வருடத்திற்கு காலத்தற்கு மேற்பட்டதாக காணப்பட்டது. | கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.வேண்டும் | ஏற்றுக் கொள்கின்றேன் |
| (ii) | 01 வருடத்திற்கு மேற்பட்ட செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 56,687,206 ஆகக் காணப்பட்டது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.வேண்டும் | ஏற்றுக் கொள்கின்றேன் |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 20,129,,706 பெறுமதியான 3 கணக்கு விடயங்களுக்குரிய இருப்பு ஆவணங்கள், வைப்பு பதிவேடு, பொருள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் மதிப்பிழந்த காசோலை களுக்குரிய விபரங்கள் தகவல்களை கணக்காய்விற்காக சமர்ப்பிக்காமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாது போனது. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதி செய்கின்ற சான்றுகள் சமர்ப்பித்தல் வேண்டும் | கணக்காய்வில் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் ஏற்றுக்கொள்கின்றேன் . |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்க ள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் 132 () உப பிரிவு | | | |
| (i) 19 (xii)பிரிவு | விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரமின்றி கொம்போஸ்ட் உற்பத்தி செயற்திட்டத்திற்காக வளவு மற்றும் 04 மாடிக்கட்டிடம் 10 ஆண்டு காலப்பகுதிக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.. | நிறுவனத்தின் சொத்துக்கள் குத்தகைக்கு வழங்கும் போது ˙பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கழிவுப்பொருள் செயற்திட்டம் கையளிக்கப்பட்டிருந்தது |
| (ii) 149 பிரிவு | சுற்றலுா ஹொட்டெல் சபைக்கு சமர்ப்பிக்கப்படும் முறையான கணக்கு தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளாமையா | சுற்றலுா சபைக்கு சமர்ப்பிக்கப்படு ம் முறையான கணக்கு தொகுதியொன் | கணக்கு தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ள சுற்றலுா சபையில் இருந்து கோரப்பட்டுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ல் அறவிடபடப் வேண்டிய வருமானம் நிதியத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | றைப் பெற்றுக்கொண்டு வருமானம் அறவிடப்பட வேண்டிய வருமானம் | |
| | 154(1) ஆம் பிரிவு | அங்கீகாரமின்றி காணிகள் துண்டுகளாக பிரிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த வரி வருமானம் சபையால் இழக்கப்பட்டிருந்தது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | துண்டுகள் பிரிப்பு அங்ககாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/3 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் iii, iv , v மற்றும் 4(ii) ஆம் பிரிவு | கட்டிமொன்றை குத்தகைக்கு வழங்கும் போது ஒரே தடவையில் கொடுப்பனவு செய்யும் ரூபா 600,000 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் பிணை வைப்பும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஒரே தடவையில் கொடுப்பனவு மற்றும் பிணை வைப்பும் பெற்றக்கொள்ளப்பட வேண்டும் | கத்தகை வழங்கல் அல்லாமையால் அவ்வாறான அறவீடொன்ற தேவையில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 46,517,379 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 77,794,557 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 9,938,681 | 9,981,743 | 7,094,801 | 7,511,399 | 9,731,513 | 9,949,917 | 6,019,180 | 6,888,502 |
| வாடகை | 6,863,272 | 10,418,822 | 8,449,819 | 17,258,864 | 6,154,373 | 9,586,887 | 7,744,037 | 15,045,495 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,332,000 | - | 5,816,917 | - | 6,530,000 | - | 6,335,981 | - |
| ஏனைய வருமானம் | 6,218,200 | 789,600 | 16,957,085 | 2,400,518 | 5,759,000 | 1,030,381 | 9,589,355 | 2,211,495 |
| மொத்தம் | 25,352,153 | 21,190,165 | 38,318,622 | 27,170,781 | 28,174,886 | 20,567,185 | 29,688,553 | 24,145,492 |

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயற்றிறன்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சேகரிக்க வேண்டிய மொத்த வருமானம் ரூபா 47,667,657 ஆக இருந்த போதும் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 38,318,622 ஆனமையால் வருமான சேகரிப்பு செயலாற்றல் 80 சதவீதமாக இருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன |

### 2.2.3 வாடகை

**கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மெனிக்ஹின்ன வியாபார தொகுதிக்குரிய 21 கடைகளிலிருந்து ரூபா. 1,423,118 நிலுவைலயாக இருந்தது. | நிலுவைப் பணம் அறவிடப்படல் வேண்டும். | மேலும் ரூபா 411,399 தொகை அறவிடப்பட வேண்டியுள்ளது. |

### 2.2.4 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா. 700,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா. 109,586,824 அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த தொகைகளை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அறவிடப்பட்டு வருகின்றது |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 20 விடயங்களுக்காக உபவிதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன க்க வில்லை. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது 20 விடயங்களுக்காக உபவிதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன |

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டங்களை** (out put) **அடையாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | ரூபா 9,080,564 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட பள்ளேகல ரஜரூபபொல எவ்வித பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் 3 ஆண்டு காலமாக விளைவற்றுக் காணப்பட்டன. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | உப அலுவலகமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா .8,142,684 செலவிடப்பட்டு 2018 ஆகஸ்ட் 17 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் உப அலுவலகமொன்றை தாபிக்காமல் இருந்ததுடன் கீழ் மாடியில் 4 கடைகளைகளை குத்தகைக்கு வழங்க தவறியிருந்தனர். | எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டங்களை அடைந்து கொள்ள வேண்டும் | கேள்வி கோரி கேள்வித் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டு வருகின்றது. |

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சேதன உரங்களின் சந்தைப்படுத்தலுக்காக திட்டமிடப்பட்ட வேலைத்திட்டமொன்று பின்பற்றப்படவில்லை அத்துடன் உக்காத கழிவினை மீள் சுழற்சி செய்ய அனுப்பாமல் பொருட்கள் சுற்றுச் சூழலுக்கு கொட்டப்படுகின்றன | கழிவுப்பொருள் செயற்திட்டமொன்றாக செயற்படுத்தும் போது அதன் வெளியீடான உர விற்பனை தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | குப்பைகளை அகற்றுவதற்கான உரமாக உற்பத்தி செய்யப்பட்டாலும், சந்தைக்கு ஏற்ற உரங்களை வழங்குவதற்கான நிபுணத்துவம் சபைக்கு இல்லை. சந்தைப்படுத்தல் திட்டமிடப்பட்ட |

| | | |
|---|---|---|
| | | திட்டம் எதுவும் இல்லை. உக்கலடையாத கழிவுகள் தொடர்பாக பல நிறுவனங்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நிரந்தர நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| i. சபையினால் நிலைபேறான அபிவிருத்தயின் இலக்குகளை இனங்கண்டு, அவற்றின் முன்னேற்றங்களை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி மற்றும் இலக்குகளை இனங்கண்டு அவற்றை நிறைவேற்றவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் கிடைக்கவில்லை |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பலகொல்ல மொரகஹபிட்டிய ப பல்நோக்க கட்டித்தின் 2 கடைகளில் மதிப்பீட்டினை செயற்படுத்தாமையால் ரூபா 15,744,000 ஆன இலாப மொன்று இழக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு பெறுமதி அடிப்படையில் கடை வாடகை அறவீடு செய்யப்பட வேண்டும். | உடன்படிக்கை காலம் முடிவடைந்தவுடன் புதிய மதிப்பீடு செய்படுத்தப்படும். |
| (ஆ) சபை வளவில் 2013 ஆம் ஆண்டு முதல் அத்துமீரிய எருமை பால் விற்பனை நிலையமொன்று நடாத்திச் சென்ற போதும் சபை எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை. | அத்துமீரிய நிர்மாணம் அகற்றப்பட வேண்டும். | உடன்படிக்கை செய்யப்பட்ட பணம் அறவிடப்பட்டு வருகின்றது. நிரந்தர மதிப்பீட்டிற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது இக்காணிக்காக வழுங்கொன்ற காணப்படுவதால் வழக்கு முடிவடைந்ததன் பின்னர் சமர்ப்பிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வீடமைப்ப அதிகாரசபையினால் வழங்கப்பட்ட காணியில் நடாத்திச் செல்லப்படும் பால் நிலையம் மதிப்பீடு செய்து குத்தகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டு குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2015 ஆம் ஆண்டு முதல் குத்தகை கொடுப்பனவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 பதவிக்குரிய 9 ஊழியர் வெறறிடங்கள் மற்றும் 3 பதவிகளில் மிகை பதவியணியினர் 4 ஆக காணப்பட்டன. | மிகை ஏற்படாத வகையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆட்சேர்ப்பதற்னுகு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிய தருகின்றேன் |
| (ஆ) | 05 இடமாற்றம் பெற்ற 5 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 927,087 ஆன இடர் கடன் மீதி அறவிடப்பட வேண்டியுள்ளது. | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒரு உத்தியோகத்தர் தவிர ஏனையவர்களிடமிருந்து அறவிடப்பட்டு வருகின்றது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற மற்றும் குறைப்பயனுள்ள சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 5,369,000 பெறுமதியான 05 வாகனங்கள் விளைவற்ற நிலையிலும் காணப்பட்டன. | பயன்படுத்த முடியாத சொத்துக்களை திருத்துவதற்கும் விளைவற்ற சொத்துக்களை கை தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 36ஸ்ரீ3571 மற்றும் 42-1472 கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். CPTM - 9979, CPRW - 4044 ஏலத்தில் விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுக்கவும் 65 – 3933 கையளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2015 பிரதேச சபை உறுப்பினர் நிதிஏற்பாடுகளின் கீழ் ரூபா 615,820 செலவிடப்பட்டு உடற்பயிற்சி உபகரணங்கள் | நிலையத்தை திறந்து சேவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொறுப்பினை ஏற்றுக் கொள்ளாமையால் நிலையம் மூடப்பட்டுள்ளது. அலுவலக உத்தியோகத்தரால் உடல் பயிற்சி க்காக பயன்படுத்தப்படுகின்றது. |

கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் உடற்பயிற்சி நிலையமொன்று அமைக்கப்பட்டிருக்க வில்லை

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 1,500,000 பெறுமதியான கழிவுப்பொருள் சலிக்கம் இயந்திரமொன்ற கொள்வனவு செய்யப்பட:டு ரூபா 500,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் கொம்போஸ்ட் பிரிவில் இடப்பட்டிருந்தது. | இயந்திரத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ்வியந்திரம் இரண்டு மூன்று மாதங்கள் பயன்படுத்தியதன் பின்னர் செயலற்றுப் போனது. இதனை சரிப்படுத்துவதற்கு நிறுனமொன்ற முன்வந்துள்ளதாக அறியத் தருகின்றேன் |

### 3.6 பெறுகைகள்

**ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டின் போது கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 25,914,615 செலவு செய்து 2018 சனவரி 03 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்ட மந்தாரா நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்ட கட்டிடத்திற்கான கட்டடத் திட்டம், தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படவில்லை, நில மாடியின் சுவருக்கு அருகில் நான்காவது மாடி slab வழியாகவும், நீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. நான்காவது மாடியின் சுவர்கள் வெடித்து இருந்ததுடன் கட்டப்பட்டிருந்தன, கட்டிடத்தின் வெளிப்புற சுவர்கள் சாந்து பூசப்பட்டிருக்கவில்லை, ஆதலால் மழை நீரில் கசிந்து சுவர்கள் பாசி பிடித்திருந்தது. | கட்டிட நிர்மாண திட்டம் அங்கீகரித்துக் கொள்ள வேண்டியதுடன் பொறியிலாளர் ஆலோசணை வேலைகள் முறையாக நிறைவேற்றப்பட வேண்டும். | திட்டத்தை அங்கீகரிக்காமை குறைபாடாக ஏற்றுக்கோள்கின்றேன். கட்டிடநிர்மாணத்தில் காணப்படும் குறைகள் தொடர்பாக பொறியியலாளர் பரிந்துரை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 09 செலவின விடயங்களிற்காக பாதிடப்பட்ட ரூபா 2,400,000 தொகையான வருமானங்களில் எவ்வித வருமானமொன்ற உழைக்காமல் இருந்ததுடன் 6 மூலதன விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்த ரூபா 33,450,000 ஆன நிதிஏற்பாடுகளில் எவ்வித செலவினமும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நடைமுறை பாதீடொன்று தயாரிக்கப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் உள்ளகக் கணக்காய்விற்காக உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்த போதும் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளகக் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருக்க வில்லை. | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஊழியர் வெற்றிடம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் உள்ளகக் கணக்காய்வு முயைாக மேற்கொள்ளப்படும் |